தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 90/ந/2022
நாள். 26.07.2022

திரு.D.இராமசுப்பிரமணியன்,
இராமநாதபுரம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
இராமநாதபுரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், வெளிபட்டிணம் அஞ்சல், புளிக்காரத் தெரு, கதவு எண். 55, என்ற முகவரியில் வசிக்கும் இராமநாதபுரம் நகராட்சியின் 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினரான திரு.D.இராமசுப்பிரமணியன் என்பவரின் 29.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.07.2022 அன்று பெறப்பட்டு 090/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், வெளிபட்டிணம் அஞ்சல், புளிக்காரத் தெரு, கதவு எண். 55, என்ற முகவரியில் வசிக்கும் இராமநாதபுரம் நகராட்சியின் 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினரான திரு.D. இராமசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

1) இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய பயணியர் ஓய்வு அறையினை தனிநபர் வியாபாரம் செய்யும் விதமாக கட்டடத்தின் அம்சங்களை ஒரு கடைபோல் மாற்றி தொழில் செய்து வருகிறார். அன்னார்மீது உரிய நடவடிக்கை எடுக்காத நகராட்சி நிர்வாகத்தின்மீது நடவடிக்கை வேண்டியும்,

2) இராமநாதபுரம் நகராட்சியில் ‘நம்ம டாய்லெட்’ மூலம் புதிய பேருந்து நிலையம், வண்டிக்காரத் தெரு, ரோமன் சர்ச் ஆகிய மூன்று இடங்களில் கழிப்பறை நிறுவப்பட்டுள்ளது. இதன் நோக்கமே முழுக்க முழுக்க மக்கள் இலவசமாக பயன்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இதில் தனி நபர் வசூல் செய்து

வருகிறார்கள். அவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் அவர்களுக்கு துணைபோகும் நகராட்சி ஆணையர் மீது உரிய நடவடிக்கை வேண்டியும்,

3) நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பறையை பொது ஏலத்திற்கு விடாமல் தற்சமயம் தனியார் எந்தவொரு அதிகாரமுமின்றி அத்துமீறி அடாவடித்தனமாக தனிநபர் ஒருவர் தனது அரசியல் செல்வாக்கினாலும், நகராட்சி அதிகாரிகளின் உதவியோடும் வசூல் செய்து வருகிறார். இதன்மீது உரிய ஆய்வு கொண்டு நடவடிக்கை வேண்டியும்,

4) நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய இலவச கழிப்பறையை தனியார் ஆக்கிரமிப்பு செய்து எந்தவொரு அதிகாரமுமின்றி வசூல் செய்து வருகிறார். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், பொது ஏலத்திற்கு கொண்டு வந்து நகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கிட நடவடிக்கை வேண்டியும்,

5) நகராட்சி பகுதி வாழ் மக்களின் அன்றாட குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு 28.04.2022 அன்று பொது ஏலமிட ஒப்பந்தப்புள்ளி கோரியதாகவும், மதிப்பீடு விபரம் மற்றவர்களைவிட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்த நிறுவனமான நியூ சமத்துவம் வாட்டர் சப்ளையினருக்கு அளித்துள்ளனர். ஆனால் அப்படி பொது ஏலம் இடவும் இல்லை செய்தித்தாள்களில் விளம்பரமும் செய்யவில்லை. அலுவலக நோட்டீஸ் போர்டுகளில் ஒட்டவும் இல்லை, இவர்கள் யார் யாருக்கு ஏல அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பினார்கள் போன்ற விபரத்தை விசாரித்தால் உண்மை தெரியும். மேற்படி கணக்கீட்டின்படி பார்த்தால் ஒரு நாளைக்கு நிர்வாகத்திற்கு செலவு லிட்டர் ஒன்றுக்கு 0.52 பைசா ஆகிறது. பொது ஏலமிட்டிருந்தால் நமக்கு லிட்டர் ஒன்றுக்கு 0.25 பைசாவிற்கு வினியோகம் செய்யும் பிற நிறுவனங்கள் கிடைக்கும் வாய்ப்பு தவறிவிட்டது. இதனால் நகராட்சிக்கு லிட்டருக்கு 0.27 பைசா இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஏலத்தினை ரத்து செய்து புதிய விலைப்புள்ளி செய்தித்தாள்களில் பகிரங்கமாக அறிவிப்பு செய்ய உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். மேலும், இந்த நகராட்சியில் இதுமட்டுமல்லாது இன்னும் எவ்வழிகளிளெல்லாம் வருமானம் ஈட்ட முடியுமோ அதையெல்லாம் தனிநபர்கள் அதிகாரிகளின் துணையோடு செய்து வருகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் இராமநாதபுரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் தனது 29.06.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

i. “29.04.2019 ஆம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்தின் மூலம் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக மாத வாடகை ரூ.13,160/– தொகைக்கு திரு.ஜி.செந்தில்குமார் என்பவர் கோரியுள்ளார். அதனை நகர்மன்ற தீர்மானம் எண்.966 நாள்.31.07.2019–ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டடங்கள் இடிக்கப்பட்டு, புதிதாக புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. புதிய பேருந்து நிலைய கட்டுமானங்களில் பயணிகள் ஓய்வு அறை கட்டப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

ii. நகராட்சியின் பராமரிப்பில் உள்ள நம்ம டாய்லெட் புதிய பேருந்து நிலையம், அண்ணல் காந்தியடிகள் தெரு, சாலைத்தெரு, ஆகிய இடங்களில் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்படுகிறது. பராமரிப்பு கட்டணமாக குறைந்த பட்ச கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை W.P.No.(M.D) 4959/2019, dated.17.08.2021-ன்படி நகராட்சிக்கு உட்பட்ட கட்டண கழிப்பறைகளை கட்டணமின்றி இலவசமாக பயன்படுத்திக் கொள்ள தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாக பராமரிக்க வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

iii. பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை பழுதடைந்த நிலையில் உள்ளது. சீரமைத்து புதுப்பிக்கப்பட்டவுடன் பொது ஏலத்திற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

iv. இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலைய இலவச கழிப்பறையை 24.09.2021 முதல் 23.09.2022 வரை உள்ள காலத்திற்கு சுத்தம் செய்து பராமரிப்பு செய்து கொள்ளவும் பராமரிப்பு செலவு கட்டணம் மட்டுமே வசூல் செய்து கொள்ளவும் இந்நகராட்சி செயல்முறை ஆணை ந.க.எண்.3427/2018/இ1 நாள் 24.09.2021ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

v. இராமநாதபுரம் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வாயிலாக குடிநீர் பெறப்பட்டு தண்ணீரை நகராட்சியால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் தினசரி வழங்கப்பட்டு வரும் நீரின் அளவு மிகவும் குறைவாக உள்ளதால் பொது மக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும், அதிருப்தி நிலவி வருகின்றது. மேலும் பொது மக்களுக்கு தினசரி தேவைப்படும் குடிநீரை வழங்காததால் போராட்டம் நடத்த ஆயத்தமாகி வருவதையொட்டியும், பொது மக்களின் தினசரி குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும், நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி இராமநாதபுரம் நகராட்சியில் போதிய குடிநீர் ஆதாரம் இல்லாத காரணத்தால் தனியார் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நகர்மன்ற

தீர்மானம் எண். 34 மற்றும் 35 நாள் 11.04.2022–ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 28.04.2022 அன்று ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் 20.04.2022 பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 28.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள எம்/எஸ். நியு சமத்துவம் வாட்டர் சப்ளை, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 20.05.2022 அன்று வழங்கப்பட்ட உத்திரவில் குடிநீருக்கு உகந்த தண்ணீரைத்தான் விநியோகம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் சுற்று வட்டாரத்தில் குடிநீருக்கு உகந்த நீர் ஆதாரம் ஏதும் இல்லாத காரணத்தால், அழகன்குளம் பகுதியிலிருந்து லாரி மூலம் வழங்கப்பட்டு வரும் தண்ணீர் சோதனை செய்யப்பட்டு தினசரி நகராட்சி பணியாளர்களின் அறிவுரையின்படியும் பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படியும் குடிநீர் விநியோகம் இல்லாத நாட்களில் நகர் பகுதியில் வார்டுகளில் உள்ள தெருக்களில் மக்கள் தொகையின்படி தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து பொது மக்களிடமிருந்தும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் ஏதும் பெறப்படவில்லை. இதில் முறைகேடு ஏதும் இல்லை'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் இராமநாதபுரம் நகராட்சி ஆணையரும் 12.07.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.D.இராமசுப்பிரமணியன், 12.07.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய பயணியர் ஓய்வு அறையினை தனிநபர் வியாபாரம் செய்யும் விதமாக கட்டிடத்தின் அம்சங்களை மாற்றி அதில் தனியார் ஒருவரால் பேக்கரி தொழில் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்த காலத்தை மேலும் நீட்டிக்காமல் பழையபடியே பயணியர் ஓய்வு அறையாக மாற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய இலவச கழிப்பறையை தனியார் ஆக்கிரமிப்பு செய்து எந்தவொரு நகராட்சி ஆணையுமின்றி நகராட்சி அலுவலர்களுடன் சேர்ந்து இலவசமான கழிப்பிடத்தை கட்டாயமாக கட்டண வசூல் செய்து வருகிறார்கள். மேலும், இராமநாதபுரம் நகராட்சியில் 'நம்ம டாய்லெட்' மூலம் புதிய பேருந்து நிலையம், வண்டிக்காரத் தெரு, ரோமன் சர்ச் ஆகிய மூன்று இடங்களில் கழிப்பறை நிறுவப்பட்டுள்ளது. மக்கள் இலவசமாக பயன்படுத்தக்கூடிய இதிலும் தனி நபர்கள் கட்டாய வசூலை மேற்கொண்டுள்ளனர். இதனையும் தடுத்து நிறுத்தி பேருந்து நிலைய கழிப்பறைகளை பொது ஏலத்திற்கு கொண்டு வந்து நகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நகராட்சியில் வசிக்கும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு குடிநீர் விநியோகத்திற்காக 28.04.2022 அன்று பொது ஏல ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏஜென்ஸி ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக செய்திதாள்களில் விளம்பரமும் செய்யவில்லை. அலுவலக நோட்டீஸ் போர்டுகளில் ஒட்டவும் இல்லை. எனவே, மேற்படி ஏலத்தினை இரத்து செய்திட வேண்டியும், மேற்கண்ட முறைகேடுகளில் ஈடுபட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன். பயணியர் ஒய்வு அறையை புதுப்பிக்காமல் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவருமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரர்களான இராமநாதபுரம் நகராட்சியில் மேலாளராகப் பணிபுரியும் திரு.கே.நாகநாதன், நகராட்சி வருவாய் ஆய்வாளரான திரு.வா.ரா.சேகர் மற்றும் துப்புரவு ஆய்வாளராக பணிபுரியும் திரு.ச.செல்லப்பாண்டி ஆகியோர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய பயணியர் ஒய்வு அறையில் கடை ஒன்று நகராட்சி அனுமதியுடன் இயங்கி வருகிறது. இதன் மாத வாடகை ரூ.13,160/– ஆகும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 'நம்ம டாய்லெட்' புதிய பேருந்து நிலையம், அண்ணல் காந்தியடிகள் தெரு, சாலைத் தெரு ஆகிய இடங்களில் தனியார் தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான பராமரிப்புக் கட்டணம் குறைந்த அளவே அதாவது நபர் ஒருவருக்கு ரூ.2/– வீதம் வசூலிக்க நகராட்சியால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறை மிகவும் பழதடைந்த நிலையில் உள்ளது. தற்போது அக்கட்டடம் பயன்பாட்டில் இல்லை. மேற்கண்ட கட்டடத்தை இடித்து கட்டடம் கட்டிட ரூபாய் 35 லட்சத்திற்கான அனுமதி 11.07.2022 அன்று மன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மக்களின் குடிநீர் தேவைக்காக மன்றத் தீர்மான ஒப்புதலின்படி தீர்மான எண். 34 மற்றும் 35 நாள். 11.04.2022ன்படி முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதற்கான விளம்பரம் தினபூமி என்கின்ற பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்த எம்.எஸ். நியு சமத்துவம் வாட்டர் சப்ளை என்கின்ற நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டது எனவும் இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும் இம்முறைமன்ற மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், இராமநாதபுரம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, இராமநாதபுரம் நகராட்சியில் பணிபுரியும் மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய ஓய்வறையில் 18.9 x 9.5 இடத்தில் கடையினை நடத்துவதற்கு இராமநாதபுரம் நகர்மன்ற தீர்மானத்தின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தித்தாளில் வெளியிட்டு உயர்பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.ஜி.செந்தில்குமார் என்பவருக்கு கடை நடத்த 01.03.2019 முதல் 31.07.2022 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மகளிர் ஆகியோர் பயணம் மேற்கொள்ள பேருந்து நிலையத்திற்கு வருகை புரியும் போது அவர்கள் அசௌகரியமின்றி இருப்பதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் பேருந்து நிலைய ஓய்வறை என்பது அவசியமாகிறது. இந்நிலையில் பேருந்து நிலைய ஓய்வறையில் கடையினை நடத்துவது குறித்த நேர்வானது எதனடிப்படையில் நகராட்சி ஆணையர் பரிசீலித்துள்ளார். ஓய்வறையில் கடையினை நடத்துவதால் பொதுமக்கள் எவ்விடத்தில் ஓய்வு எடுத்துக்கொள்ளமுடியும் என்கிற வினா எழுகிறது. இச்சூழ்நிலையில் பேருந்து நிலைய ஓய்வறையில் கடையினை நடத்துவது என்கிற செயல் கண்டிக்கத்தக்கது. வருவாய் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல் பொதுமக்களின் நலன் கருதி நகராட்சி நிர்வாகமானது கடையின் மூன்று ஆண்டுகள் கால உரிமம் 31.07.2022 அன்று முடிவடையவுள்ள நிலையில் மேற்கொண்டு ஓய்வறையை நடத்துவதற்கு எவ்வித உரிம நீட்டிப்பும் வழங்காமல், ஓய்வறையாக மட்டுமே மாற்றி, பயணிகள் பயன்படுத்திடவும், அதனை சுகாதாரமாக நகராட்சியால் பராமரிக்கப்பட வேண்டும் எனவும் இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

- 'நம்ம டாய்லட்' திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம், காந்தியடிகள் தெரு மற்றும் ரோமன் சர்ச் ஆகிய இடங்களில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது வழக்கு எண். W.P (MD) No.4959/2019, W.P (MD) No.3941 மற்றும் 3942/2019 ஆகியவற்றில் வழங்கிய 17.08.2021 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையிலான நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படியும் மற்றும் நகராட்சியின் நகர்மன்ற தீர்மானத்தின்படியும் பொது தொண்டு நிறுவனம், மேற்காணும் கழிப்பறைகளை பராமரிப்பு மேற்கொள்ள மாற்றுதிறனாளிகள் தவிர்த்து மற்ற பொது மக்கள் மூலம் மிக குறைந்த கட்டணமாக ரூ.2/– வசூலித்து, 24.9.2021 முதல் 23.9.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் வழங்கியுள்ள ஆணையின் மூலம் அறிய முடிகிறது.

- பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை தற்பொழுது மிகவும் பழுதடைந்து உபயோகத்தில் இல்லை என்பதால், அதனை ரூ.35 இலட்சம் செலவில் புதிய கழிப்பறையை கட்ட நகராட்சியின் நகர் மன்றத்தினால் 11.07.2022 அன்று அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என வாக்குமூலத்தில் அளித்துள்ள அறிக்கையின் மூலம் மனுதாரர் புகார் தெரிவித்தபடி தனி நபர் வாயிலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது என கருத இயலவில்லை.

- இராமநாதபுரம் நகராட்சியின் நகர்மன்ற தீர்மானத்தின்படி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இலவச கழிப்பறையினை நன்கு பராமரிப்பு செய்வதற்காக, பராமரிப்பு கட்டணம் ரூ.2/– மட்டுமே மாற்றுத்திறனாளிகள் தவிர்த்து பொது மக்களிடம் வசூல் செய்து பராமரிக்க தனியார் தொண்டு நிறுவனத்திற்கு 24.09.2021 முதல் 23.09.2022 வரை ஒரு வருட காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை ஆவணம் மூலம் தெரியவருகிறது.

> "இருப்பினும், கழிப்பறைகளுக்கு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருப்பதையும், சுகாதாரத்துடன் பராமரிப்பு செய்வதையும் உறுதி செய்திட நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்".

- இராமநாதபுரம் மக்களின் குடிநீர் தேவைக்காக தனியார் நிறுவனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி நகர் மன்றத்தில் 11.4.2022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 20.4.2022 நாளிட்ட செய்தி தாள் மூலமாக பிரசுரித்து 28.4.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய M/s. நியூ சமத்துவம் வாட்டர் சப்பளை என்ற நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை ஆவணத்தின் மூலம் உறுதியாகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் பொதுமக்கள் சிரமமின்றி பயணம் செய்யும் வகையிலும் மற்றும் அவர்களின் சுகாதார மேம்பாட்டினை கருத்தில் கொண்டும் இந்நேர்வினை பரிசீலனை செய்து,

i) இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய ஓய்வறையில் தற்போது நடத்தி வரும் கடையின் உரிமக்காலம் 31.07.2022 அன்று முடிவடைய உள்ள நிலையில், அதன் உரிமக்காலத்தை மேலும் நீட்டிக்காமல், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, 01.08.2022 முதல் பயணியர்கள் தங்கும் வகையில் ஓய்வறை மட்டுமே பயன்படுத்திட நகராட்சி ஆணையர் உறுதி செய்திடவும்,

ii) 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டம் பிரிவு 145–ன்படி, இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பொது கழிப்பறைகள் எந்தவித சுகாதார கேடுமின்றி முறையாக பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறதா என்பதை நகராட்சியின் சுகாதார ஆய்வாளர் அடிக்கடி ஆய்வு செய்து, பொது மக்களிடமிருந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி பராமரிப்பதை உறுதி செய்திடவும்,

iii) கழிப்பறைகளுக்கு நிர்ணயித்த பராமரிப்பு கட்டணத்தைவிட கூடுதலாக வசூலிக்கப்படாமல் இருப்பதை கண்காணிக்கவும் இராமநாதபுரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி, இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

iv) இலவச கழிப்பறைகளுக்கு வருங்காலங்களில் கட்டணம் வசூல் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏழை எளிய மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு இதைச் செய்ய நகர்மன்றம் அறிவுறுத்தப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.D. இராமசுப்பிரமணியன்,
கதவு எண். 55, புளிக்காரத் தெரு,
வெளிபட்டிணம் அஞ்சல், இராமநாதபுரம் – 623 504.

2) ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம் – 623 504.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.